## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

**O.S.NO.90/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness** | : | **PW - 2** |
| **Name** | : | பொன்னுசாமி |
| **Father's Name /W/o** | : | த/பெ.லேட்.அருணாச்சல நாயக்கர் |
| **Religion** | : | இந்து |
| **Caste** | : | - |
| **Calling** | : | - |
| **Address** | : | கார்த்திகேயபுரம், திருத்தணி வட்டம். திருவள்ளூர் மாவட்டம். |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 13.04.2023.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

1. தாவா சொத்து தணிகைபோளூர் கிராம மதுரா அல்லியப்பன் தாங்கல் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வீட்டின் கதவு எண்.90 என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த தாவாவிலும் சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் நானும் என் மனைவி சோகமுத்தம்மாளும் திருத்தணி வட்டம் கார்த்திகைபுரம் கிராமம் சரஸ்வதி நகர் எல்லையம்மன் கோவில் தெரு கதவு எண். 3/154ல் குடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் ஆம் அங்கும் ஒரு வீடு உள்ளது. தாவா சொத்து உள்ள வீடு அரக்கோணம் வட்டம் என்றாலும் தாவாவில் குடியிருப்பதாக சொல்லும் இடம் திருத்தணி வட்டம் என்றால் நான் இங்கேயும் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள தாவாவிலோ சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ இரண்டு இடத்திலும் குடியிருப்பது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

2. தாவா சொத்தின் கதவு எண்.90க்கு பிரதிவாதி பெயரில் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கு ஆகியவை அவர் பெயரில் உள்ளது என்றால் அவர் பக்கத்தது

வீட்டில் உள்ளார். தாவா வீட்டிற்கு பக்கத்து வீட்டில் ராமச்சந்திரன் குடியிருக்கிறார் என்று தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா வீட்டில் குடியிருக்கவில்லை என்றும், பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார் தாவாவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பிரதிவாதி காலி செய்து சுவாதீனம் தர வேண்டும் என்று நான் தாவா தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பிரதிவாதியிடம் போட்ட ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்றும் முன் பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 4 மாதத்தில் வாங்கி சென்று விட்டார்.

3. பிரதிவாதி என்னிடம் ஒப்பந்தம் போட்ட 4 மாதத்தில் திரும்ப பணத்தை வாங்கி கொண்டார் என்பதற்கு ' தாக்கல் செய்தள்ளேனா என்றால் இல்லை வாய்மொழியாக பெற்று சென்றார். எந்த தேதி எந்த மாதத்தில் முன் பணத்தை திரும்ப பெற்றுக் கொண்டார் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தேதி தெரியும். என் மனைவி தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலும் எந்த தேதி எந்த மாதத்தில் முன் பணத்தை திரும்ப பெற்றுக் கொண்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. ராமச்சந்திரன் பணத்தை திரும்ப பெற்று சென்றார் என்று நான் சொல்வது தவறு என்றாலும், அவர் எந்த பணத்தையும் திரும்ப பெறவில்லை என்றாலும், ஒப்பந்தப்படி மொத்த பணத்தையும் வங்கிக்கு என் பெயரில் மொத்த கடனையும், அவர் தான் கட்டினார் என்றால் சரியல்ல நான் தான் கட்டினேன். பிரதிவாதி தாவா சொத்தில் வாடகைக்கு உள்ளார் என்றும் வாடகை ரூபாய் 1500 மற்றும் வட்டியுடன் பாக்கியிருந்தது என்று அசல் வழக்கு எண்.93/2009ல் பிரதிவாதிக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. அசல் வழக்கு எண்.93/2009ல் பிரதிவாதிக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 08.09.2014 அன்று அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும், தெரிந்திருந்தே தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றியும், அத தள்ளுபடி ஆன விவரத்தையும் பிரதிவாதி பதில் உரையில் சொல்லியுள்ளதை வழக்கறிஞர் மூலம் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பதில் உரையில் உள்ள விவரங்களை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றல் இல்லை. அந்த வழக்கு தள்ளுபடி ஆன பிறகு என் மனைவி பெயரில் ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி என் மனைவி மூலம் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதியது தான் தெரியும் மற்ற விவரங்கள் தெரியாது.

5. என் மனைவி பெயரில் ஆதரவு வேண்டும் என்று எழுதவில்லை என்றாலும் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நானும் என் மனைவியும் செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. நானும் என் பிள்ளைகளும் சேர்ந்து 12.07.1999ல் பிதிவாதியுடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் இல்லை. அந்த ஒப்பந்த தேதியில் இருந்து இன்று வரையில் பிரதிவாதி தான் அந்த இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை நான் தான் அந்த இடத்தில் பூட்டி வைத்துள்ளேன். பிரதிவாதி அந்த இடத்தில் குடியிருக்கவில்லை நான் தான் அந்த இடத்தில் பூட்டி வைத்துள்ளேன் என்ற விவரத்தை என் மனைவி தாக்கல் செய்துள்ள தாவாவிலோ நான் தாக்கல் செய்தள்ள சத்தியப்பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

6. என் மனைவி உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 10.09.2018 மற்றும் 21.10.2018 அன்று பிரதிவாதி தாவா வீட்டிடம் வந்து வாதியின் சுவாதீனத்தை தடை செய்ய முற்பட்டார் என்று சொல்வது தவறு என்றாலும், ஏனென்றால் 12.09.1999 ஒப்பந்தம் ஏற்பட்ட நாள் முதல் பிரதிவாதி தாவா சொத்து இடத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றால் அவர் அந்த வீட்டில் இல்லை பக்கத்து வீட்டில் உள்ளார். அந்த வீடு பாழடைந்து உடைந்து விட்டது.

பிரதிவாதி வாதியினுடைய அனுபவத்தை தடை செய்ய முற்பட்டார் என்று சொல்வது தவறு என்றாலும் வியாஜினமூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்க கதவு எண்.90 என்று தெரிந்திருந்தும் சொத்து அட்டவணையில் கதவு எண்ணை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. என் பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்கான மின் இணைப்பை பயன்படுத்தி அவர் தான் பணம் செலுத்தி வருகிறார் என்றால் சர்வீஸ் என் பெயரில் உள்ளது நான் பயன்படுத்தவில்லை அவர் தான் பயன்படுத்துகிறார். பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள உறுத்துக்கட்டளை வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.